7th Jan 2011

# தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு மையங்கள்




தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான முகாமில், பிரபல பின்னணி பாடகர்கள் திப்பு, ஹரணி ஆகியோர் ஆராய்ச்சி மையத்தின் மையக்கருத்து பாடல் அடங்கிய சிடி கேசட்டை வெளியிட அதை பெறுகிறார் மாவட்ட ஆட்சியர் டாக்டர் உமாநாத்.

மேட்டுப்பாளையம், பிப். 7: தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பயனடையும் வகையில் தமிழக அரசு சார்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தசை பயிற்சி மற்றும் மறுவாழ்வுக்கான சீரமைப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக, கோவை மாவட்ட ஆட்சியர் டாக்டர் உமாநாத் தெரிவித்தார்.

கோவை அவினாசிலிங்கம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மூலக்கூறு ஆராய்ச்சி மையம் சார்பில், தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான 2 நாள் கேளிக்கை பயிற்சி முகாம், பிப். 5, 6 தேதிகளில் நடைபெற்றது. மேட்டுப்பாளையம் பிளாக்தண்டர் ரிசார்ட்டில் நடைபெற்ற முகாமுக்கு ஆராய்ச்சி மையத்தலைவர் டாக்டர் லட்சுமி தலைமை வகித்தார். கோவை அவினாசிலிங்கம் நிகர்நிலை பல்கலைக்கழக துணைவேந்தர் ஷீலா ராமசந்திரன், பதிவாளர் கௌரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பாளராக மாவட்ட ஆட்சியர் டாக்டர் உமாநாத் பங்கேற்றார்.

## ஆட்சியர் உமாநாத்

நிகழ்ச்சியில், ஆராய்ச்சி மைய உறுப்பினர் ஆர்த்தி சார்பில், மரபணுப் பரிசோதனை, அதன் பதிவுகள், பராமரிப்பு மற்றும் நோய்த் தடுப்பு முறைகள் குறித்து வீடியோ பதிவு மூலம் செயல்முறை விளக்கப் பயிற்சி வழங்கப்பட்டது.

தொடர்ந்து, ஆராய்ச்சி மையத்தின் மையக்கருத்து பாடல் அடங்கிய சிடி.யை பிரபல பின்னணிப் பாடகர்கள் திப்பு, ஹர்ணி ஆகியோர் வெளியிட, மாவட்ட ஆட்சியர் உமாநாத் பெற்றுக்கொண்டார்.

முகாமில் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென கார்ப் பந்தயம், படகு சவாரி, முகத்தில் வண்ணம் தீட்டுதல், மாயாஜாலம் மற்றும் நகைச்சுவை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மாநிலத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த 45 தசை-சிதைவு குழந்தைகளும் பெற்றோரும் கலந்து கொண்டனர்.